பத்துவயதாச்சு பைங்கொடியாளல்லியற்கு
வளர்ந்துசமைந்தாள்காண் மாதுருதுவானாள்

### ஸ்ரீ கிருஷ்ணர் அல்லியை அர்ச்சுனற்கு பாரியாக நினைத்தது

ஏழுலகையாண்டதொரு எம்பெருமாள் தான்பார்த்து
அல்லிமலரி லவதரித்தபெண்பெருமாள்
அழகில்மிகுந்ததொரு அல்லியரசாணியரை
தக்கப்புகழுடைய தருமராதம்பியரை
காண்டாவனமெரித்த காளையந்தவருச்சுனர்க்கும்
ஆணலழகருக்கும் அல்லியரசாணியர்க்கும்
இவர்களழுகுக்கும் ஏற்குங்காண் வையகத்தில்
என்றுசொல்லிமாயவனார் இயலாகத்தானினைந்து
சோலைமலருடைய சொக்கருமாயவரும்
அருளால்மிகுந்ததொரு அங்கயற்கண்ணையகியும்
தேவாதிதேவருடன் தென்மதுரைவந்துநின்று
அடங்கலுந்தானழைத்து ஆறுயிரவருஷமாய்
பெண்கேட்கவந்தோங்காண் பேருலகில்ராஜாவே
பெண்ணாய்ப்பிறந்தாலும் பிழையில்லாப்பெண்பெருமா [ள்
நீள்முகனைக்கொன்று நீலிபட்டமாண்டவள்காண்
கூடியவர்தானினைந்து கொம்பனையைக்கொல்லுகைக்கு
மதுரைப்பதியாளும் மன்னவர்கள்பாண்டியரே
மணக்கோலம்வந்தோங்காண் பேருலகில்ராஜாவே
என்றுயிவருரைக்க இராஜமன்னரேதுசொல்வார்
ஆறுயிரவர்களும் ஐயன்மாரேதுசொல்வார்
மந்திரவாளோடே மயிலனையாள் தான்பிறந்தாள்
கண்டவரைக்கொன்று கழுவிலேயேற்றிவைப்பாள்
அண்டமாம்பெருநீலி ஆர்சொல்லுங்கேளாளே
அவளுக்குஏற்றவர்தா னருட்சுனரேயாகுமென்றார்
ஆண்காற்றடித்தால் அதம்பண்ணிப்போட்டிடுவாள்
உங்களாலானபடி உத்தமரேபாருமென்றார்

### அருச்சுனன் பாம்பாகவும் பெருமாள் பிடாரனாகவும் வருதல்

ஏழுலகையாண்ட எம்பெருமாள்தான்கேட்டு
என்னாலேயாகுமென்று எழுந்திருந்தாரெம்பெருமாள்
காண்டாவனமெரித்த காளையென்னுமர்ச்சுனரை

## புலந்திரன் தாயாரைக் காண்கிறது

சற்றேநான் தட்டலுமே தருமர் திருமகனும்
பொட்டனவே கண்விழித்து புலந்திரனுர் தான்பார்த்து
அவர்-அஞ்சிப்பயந்து அட்சணமெழுந்திருந்து
உத்தமனுற்வேந்தன் உருமாலைதான்சுழல [தைவிட்டு
திட்டெனவே தான்குதித்தான் செம்பொன்னின்மெத்[ள்
பூங்காவில்போகவென்ருல் பொற்கொடியுங்கிட்டிவந்தா
மலர்க்காவில்போகவென்ருல் மாதாவுங்கிட்டிவந்தாள்
மாலைமுடியானும் மலரணையிற்பூவெடுத்து
மாதாவின்பாதமது மலர் தூவி தெண்டனிட்டான்
வந்துபணிந்தவனை வாளாலேதானெடுத்து
மாணிக்கமெத்தைதன்னை வாளாலேதான்விலக்கி
ஏறியிருந்தானே ஏகாந்தகட்டிலின்மேல்
போரஞ்சாமன்னன் புலந்திரனுங் கூறலுற்ருன்
இந்நேரம்ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
நான்-செய்துவந்தகாரியத்திற் செய்தபிழையுமுண்டோ
ஊரிற்புதுமையுண்டோ உங்களூரிற்குற்றமுண்டோ
யானைப்படுகுழியும் ஆச்சிமிகாரச்சியத்தில்
மெத்தக்களவுகள் மெல்லியரே வந்ததுண்டோ
கப்பலுஞ்சோங்கும் களவுகள்மெத்தவுண்டோ
இந்நேரம் ஆச்சிநீ ரிங்குவந்தகாரியமேன்
சொல்லியேதான்தொழுதான் சுந்தரப்பூமுடியான்
தாமக்கருங்குழலாள் தாதிகளும்மூப்பிகளும்
வேருென்றுமில்லையையா வேந்தர்பெருமாளே
அஞ்சாதேயென்றுசொல்லி அணைத்தெடுத்துதாதியர்க
ஆடையொதுக்கியே ஆபரணம்ஒப்பமிட்டு [ள்
உத்தமனுர்வேந்தருக்கு உருமாலைதானுங்கட்டி
காவலனுர்வீரியனுங் கைக்கட்டிநின்ருனே
அஞ்சியேநின்ருனே ஐயன்பெருமாளும்

## புலந்திரனுக்கு சொல்லுகிறது

மைந்தன்புலந்திரனை வளநாடுதான்பார்த்து
தருமமுடியானே தனிமையாகப்பள்ளிகொண்டால்
உன்-மச்சினியாள்தானொழிய மறுநாட்டாளாகாதோ
அத்தைமகளொழிய அசல்நாட்டாளாகாதோ
ஐயனுர்கோவிலிலே ஆடும்ரம்பையாகாதோ

காலத்திற்பெற்றபிள்ளை கைக்குதவிகண்டீரோ
போனீரேயாமாகில் புத்திரரைப்பெற்றிடுவீர்
பெற்றீரேயாமாகில் பேருண்டாய்வாழ்ந்திடுவீர்
பொற்கொடியாளரண்மனைக்குப் போவீர்புலந்திரரே
போரஞ்சாமன்னன் புலந்திரனுங்கூறலுற்றான்
எனக்குமோரையாண்டு ஏந்திழையாள்மூவாண்டு
மாலையிட்டபிற்பாடு மாது அறியாளே
தையலர்க்குமங்கலியந் தரித்தவகைநானறியேன்
என்னையவளும் ஏந்திழையாள்தானறியாள்
நானும்வளர்ந்தது நாயகியும்தானறியாள்
என்-மாமியார்வீட்டை மறுபடியும்போவதில்லை
மாமியார்வீட்டிலே மருவுண்டுவந்ததில்லை [மென்றார்
பொற்கொடியாள்வாசலுக்குப் போகும்வகைசொல்லு

பிள்ளைமீது கோபித்து விலங்குபோடச் சொல்லுவது

அரசாளும்நாயகியாள் அல்லியருந்தான்கேட்டு
சீரிபொரிபறந்து செவ்வாள்கருகவிட்டு [ம்
எதிர்த்தெதிர்த்துப்பேசுவதும்என்னுடன்சொல்லுவது
மறுத்துத்தடுக்கிறாய் மன்னாகருவமென்ன
இந்தகருவத்தை யிப்பொதடக்குவேன்பார்
கட்டழகிதாதியரே கருமானையழையுமென்றாள்
விஜயனார்தன்மகனை விலங்கிலேபோடுமென்றாள் [ங்கு
கால்விலங்குகைவிலங்குகழுட்டவொண்ணாப்பெருவில
மார்விலங்குதோள்விலங்கு மன்னனுக்குபோடுமென்றாள்

புலந்திரன் சொல்வது

போரஞ்சாமன்னன்புலந்திரனும் கூறலுற்றான்
என்னைவிலங்குபோடஎன்செய்தேனென்தாயே
போகாத அரண்மனைக்குப்பொற்கொடியேபோனேனோ
மங்கையர்கோவிலுக்கு வலுவிலும்போனேனோ
குடிமகள்வாசலிலே கூசாமல்போனேனோ
உப்பரிகையேறிதான் உயரக்குதித்தேனோ
கப்பல்கள்சோங்குகள் களவுகள்செய்தேனோ
என்னகொடுமைசெய்தேன் என்னைவிலங்கிலிட
அரசாளும்நாயகியாள் அல்லியருங்கூறுகிறாள்
ஆரடாதம்பியரே அல்லவென்றாற்போதாது
அத்தனையுமல்லாமல் அரசேநீர்கேட்டருள்வீர்

கட்டாணிவார்த்தைகளும் கைநீட்டுப்பேச்சுகளும்
ஓக்கநின்றுபார்த்ததில்லை உத்தமியாளென் தாயார்
தேவியதுவாய்ப்பிறப்பை திகழ்வீரன் தான்கேட்டு
அரைத்திருந்தசந்தனத்தை அள்ளியறைந்தாப்போல்
வற்றிக்கிடந்த வருள்பெரியகாவேரி
மூட்டப்பெருகியே கரைபுரண்டுவந்தாற்போல்
தேகங்குளிர்ந்தாரே இருதோளும்பூரித்து
பூரித்திருதோளும் போன்றுபாணமெல்லாம்
இத்தனைவார்த்தைக்கும் ஏனென்றுங்கேளாமல்
மௌனமாய்த்தானிருந்தார் வாசற்படிதனிலே
பொற்கொடியாள்மாது பூவைகலந்தாரி
பேசாமல்தானிருந்த புண்ணியரைத்தான்பார்த்து
மாதுமையாள்வெறுத்து மன்னனைத் தூஷித்து
கோபத்துடன்தானிருந்தாள் கொம்பனையாளப்போது

புலந்திரன் பெண்சாதியைப் பார்த்து சொல்வது

போரஞ்சாமன்னர் புலந்திரவீரியரும்
தேவியின்றன்முகத்தை திரும்பியவர்பார்த்து
அன்னநடையாளே- உயிர்தப்பசுங்கிளியே
வாழும்பெருமைகளும் மாமன்மார்சேவகமும்
மன்னர்பெருமைகளும் காவலர்பேர்சேவகமும்
இத்தனையுஞ்சொல்லி எடுத்துரைத்தாய்பெண்மயிலே
மங்கிலியத்தோடே மயிலனையேநீயிருக்க
கொண்டார்பெருமை குடிப்பெருமைசொல்லலையோ
ஆளன்பெருமை அரிவையரே சொல்லலையோ
வண்டார்குழலாளே வாழாப்பெண்ணாயிருக்க
நீர்செய்தகுற்றங்கள் நேரிழையேதானுமுண்டோ
சொல்லுஞ்சொல்லுமென்று செவிகொடுத்துகேட்டிருந்
கோபம்பெருகிக் கொம்பனையாள்கண்சிவந்து [தார்
ஆமுலையாளும் அளவற்றகோபமதாய்
மாணிக்கத்தூண்மறைவை மயிலனையுமாராய்ந்து
கொள்வினையுமங்கே கொம்பனையுமாராய்ந்து
கூட்டுறவுகொண்டு கொற்றவனேவந்தாயோ
வந்தவழிபார்த்து மன்னவனே நடவுமென்றாள்

புலந்திரன் பெண்சாதியை வளப்பங் கேட்கிறது


ஆரணங்குசொல்லுகையில் அதுகேட்டுயிந்திரரும்
அன்னமேகோயில் ஆர்கோட்டைசொல்லுமென்றார்

## துரியோதனனுக்குச் சொல்லுகிறது

என்று துரியோதிரனும் இருதயந்தான் கலங்கி
மன்னர்கர்னரை வாவென்று தானழைத்தான்
கர்னர்பெருமாளும் கடுகெனவேவந்துநின்றான்
கர்னர்முகம்நோக்கி கபடனுமே துசொல்வான்
நீர்—சொன்னதுமெய்யாச்சி சூதாய்முடிந்ததுகாண்
அடையாளக்குறிப்பைநான் ஆராய்ந்துபார்க்காமல்
வீண்பழியுன்மீதில் விருதாவாய்ச்சுமத்திவைத்தேன்
இப்போ அல்லிமுடிதரித்து ஆழிசெங்கோல்கைபிடித்து
அடையாளந்தன்னுடனே அதிகாரம்பெற்றுவந்தாள்
இப்போதெரிந்தது இந்திரனார்வந்தாரென்று
விருதாவாய்ப்பெண்கள் வீணகச்சொல்லுகிறார்
ஏன்—நமக்குபழிபாவம் ஏந்திழைமார்தனுடனே
வந்ததொருபெண்களுக்கு வயனமாய்நீருரைத்து
சமாதானஞ்செய்து சாந்தகுணமாக்கி
கோபத்தையடக்கி கொம்பனைமார்தன்னுடனே
அல்லிமருமகளை அரிவையர்கள்தன்னுடனே
கூட்டியுறவாக்கி கோட்டையிலேகொண்டுசென்று
செல்வமுஞ்சீரும் சிறப்புகளுந்தான்செய்து
அவர்கள் நடைப்படிக்கு அன்புடனேநீர்செய்து
திட்டப்படுத்தும் சீர்கர்னர்மன்னவரே
போமென்றுசொல்லி போர்வேந்தன்தானடந்தான்

## கர்னர் பெண்களைக் கண்டது

அப்போதுகர்னர் அதிகமனமகிழ்ந்து
அச்சுதாண்டையிலே அறிக்கையிட்டார்கர்னரவர்
இருவரும்கூடி எதிர்வந்தபெண்கள்முன்னே
வந்தெதிரேநின்றார்கள் மங்கையர்கள்முன்னே
ஏறிட்டுப்பார்த்தார்கள் ஏந்திழையாள்தாதியர்கள்
மறையவர்கர்னருக்கு வணங்கியேதான்தொழுதான்
வந்துபணிந்த மங்கையரைத்தான்வாழ்த்தி
பொறும்பொறும்கோபங்கள் பொற்கொடியேமாதாசே
பட்டால்தெரியும் பாரகுணமில்லாதார்
கேட்டால்தெரியாமல் யாரோயெவரோவென்று
தெரியாமல்செய்தான் திரியோதனப்பெருமான்
ஆழிக்குஞ்செங்கோற்கும் அதற்காகப்பொறுத்தருளும்




# திருமண இரகசியம்?

ஆனந்தமான திருமணத்தின் இரகசியங்களில் ஒன்று திட்டமிட்ட குடும்பத்தை அமைத்துக் கொள்வதாகும். நன்கு அமைக்கப்பட்ட சந்தோஷமான மணவாழ்க்கையை அடைய இது உதவும்.

கடவுளின் அனுக்கிரகத்தினால் குழந்தைகள் பிறக்கின்றன. எனினும் அதிக அளவு குழந்தைகளினால் கவலையும், மகிழ்ச்சியில்லாமையும் தான் ஏற்படும். மேலும் பெற்றோர்களின் பொருளாதாரத்திற்கு சுமையாகவும் இருக்கும்.

ஒரு கர்ப்பத்திற்கும் மறு கர்ப்பத்திற்கும் இடைப்பட்ட காலத்தை அதிகரிக்கவும், குடும்பத்திற்கு வரம்பு கட்டவும் பல முறைகள் உள்ளன. அவைகள் சுலபமானவை, சாதாரணமானவை, பத்திரமானவை. இந்த பல்வேறு முறைகளின் விளக்கங்கள்

## குடும்பக் கட்டுப்பாடு

என்ற புத்தகத்தில் உண்டு. ஒவ்வொரு திருமணத்தின் போதும் இப்புத்தகத்தை வாங்கி பரிசளிக்கலாம்.

விலை ரூ. 3-00 தபாலில் அனுப்ப ரூ. 3-75 M.O. அனுப்புங்கள்

**ஸ்ரீமகள் கம்பெனி**

122, வரதாமுத்தியப்பன் தெரு, சென்னை-1

கிளைகள் மதுரை, திருச்சி, கோவை, பெங்களூர்

கலா